புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • ஏப்ரல் 03, 2025 • புரட்சி 25 • முழக்கம் 12 • விலை ரூ.3.00

## கல்விக் கொள்கையில் மதவாதம் திணிப்பு; மாநில உரிமைகள் பறிப்பு;

# சோனியா காந்தியின் திராவிட இயக்கக் குரல்

காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா, “ஒன்றிய ஆட்சி நாட்டின் கல்வி முறையைப் படுகொலை செய்து வருகிறது. மாநிலங்களைக் கலந்து ஆலோசிப்பதில்லை, மானியங்களை நிறுத்துகிறது, மதவாதத்தைத் திணிக்கிறது. பல்கலைக்கழகங்களில் ஆளுநர்களுக்கு ஏகபோக அதிகாரங்களை வழங்குகிறது கல்வித்துறையில் ஆர்.எஸ்.எஸ். சிந்தனையாளர்களை ஊடுருவவிட்டுள்ளது” என்று குற்றம்சாட்டியுள்ளார்.

திராவிட இயக்கத்தின் குரலாக, சோனியாவின் இந்த கருத்து அமைந்துள்ளது. இதுகுறித்து ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (மார்ச் 31)-இல் அவர் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதன் சுருக்கமான கருத்துக்கள். இந்திய கல்விமுறையை மூன்று “சி”க்கள் வேட்டையாடுகின்றன. அதிகாரக் குவிப்பு (centralisation of power), வணிகமயமாக்கல் (Commercialisation) மற்றும் மதவாதமயமாக்கல் (Communalisation). இதில் மட்டுமே ஒன்றிய அரசு கவனம் செலுத்தி இருக்கிறது. கவர்ச்சிகரமான தேசிய கல்விக் கொள்கை 2020-ஐ அறிமுகப்படுத்தி நாட்டின் குழந்தைகள் இளைஞர்களின் கல்வியை ஆழமான அரசியல் ஆக்கி வருகிறது.

கட்டுப்பாடற்ற அதிகாரக் குவிப்பு கடந்த 11 ஆண்டுகளாக பாஜக அரசின் செயல்பாட்டின் அடையாளமாக இருந்து வருகிறது. இது கல்வித்துறையில் மிகப்பெரும் தீங்குகளை உருவாக்கி இருக்கிறது. ஒன்றிய மற்றும் மாநில கல்வி அமைச்சர்களைக் கொண்ட ஒன்றிய கல்வி ஆலோசனை வாரியம் (சி.ஏ.பி.இ.) கடந்த 2019 செப்டம்பரில் இருந்து எந்த ஆலோசனையும் நடத்தவில்லை. மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசிப்பதும் இல்லை. பொதுப் பட்டியலில் கல்வித் துறை இருந்தாலும் கூட மாநில அரசை கலந்து ஆலோசிக்க வேண்டும் என்பதை புறக்கணித்து விட்டு, தனது சொந்த முடிவையே மாநிலங்கள் மீது திணிக்கிறது. தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் மோடி அரசு கல்வியை வணிகமயமாக்கி வருகிறது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. ஏழைகள் பொதுக் கல்வியில் இருந்து வெளியேற்றப்படுகிறார்கள். முறைப்படுத்தப்படாத தனியார் பள்ளிகளில் சிக்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

உயர் கல்வியில் பல்கலைக்கழக மானியக் குழுவின் முந்தைய தொகுதி மானிய முறைக்கு மாற்றாக, உயர்கல்வி நிதி நிறுவனத்தை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பாடத்திட்டத்தின் முதுக்கெலும்பான தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலில் (என்.சி.இ.ஆர்.டி.) பாடப்புத்தகங்கள் மற்றும் இந்திய வரலாறுகள் மதவாத நோக்கத்துடன் திருத்தப்படுகின்றன.

காந்தியின் படுகொலை, முகலாய இந்திய வரலாறு பாடத்திட்டங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இந்திய அரசியல் அமைப்பின் முகப்புரையைப் பாடப் புத்தகத்தில் இருந்து நீக்கி பிறகு கடும் எதிர்ப்புகள் வந்தற்கு பிறகு அது சேர்க்கப்பட்டது. கற்பித்தலின் தரம் மிகவும் மோசமாகி விட்டது. அதே நேரத்தில் ஆட்சியாளர்கள் தங்களின் சித்தாந்த பின்னணியைக் கொண்ட பேராசிரியர்கள் அதிக அளவில் பல்கலைக்கழகங்களில் பணியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள், இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வளைந்து கொடுக்கும் சித்தாந்தவாதிகளுக்கு முக்கிய கல்வி நிறுவனங்களில் தலைமைப் பொறுப்புகள் ஒதுக்கப்படுகின்றன. இதன் மூலம் கல்வித்துறைகள் பொது சேவை உணர்வில் இருந்து முற்றாக மாற்றப்பட்டு உள்ளன. இந்த அரசாங்கத்தால் செய்யப்படும் மிக அவமானகரமான செயல்களில் ஒன்று ‘சமஸ்கிர சிக்சா அபியான் (எஸ். எஸ். ஏ.)’ திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய மானியங்களை நிறுத்தி வைப்பது. இதன்முலம் மாதிரிப் பள்ளிகளில் (பி.எம்.) திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசுகள் வற்புறுத்தப்படுகின்றன.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமிப்பதில் மாநில அரசுகளை முழுமையாக விலக்கி மானியக் குழுவின் வரைவு வழிகாட்டுதல்களை உருவாக்கி இருக்கிறார்கள். இது மிகவும் கொடூரமானது. இதில் ஆளுநர்களுக்கு ஏகபோக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது பொதுப் பட்டியலில் உள்ள கல்வியை ஒன்றிய அரசின் தனிப்பிரிவாக மாற்றுவதற்கான பின்வாசல் முயற்சி என்று சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார். கல்வியில் திராவிட இயக்கங்கள் என்ன நிலைப்பாட்டை எடுத்ததோ அதே கருத்தை சோனியா காந்தி இப்போது எதிரொலித்து இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடு!

காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திர சரஸ்வதி பெங்களூருவில் கடந்த ஜனவரி 19-ம் தேதி நடந்த ‘பிராமண’ மாநாட்டில் சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்டுள்ள இன ஒதுக்கல் (Apartheid) என்ற சட்ட விரோதக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்.

‘பிராமணர்கள்’ என்பது வர்ணாசிரமத்தின் அடையாளமாகும். ஜாதி அடையாளம் அல்ல. அய்யர், அய்யங்கார் என்பது ஜாதி. ‘பிராமணர்’ என்ற வர்ணாசிரம அடையாளத்தைப் பேசினால் இந்து மதத்தின் பிற பிரிவினரை சூத்திரர், பஞ்சமர் என்று இழிவுபடுத்துவதாகும். அந்த அடிப்படையில் விளிம்பு நிலை மக்களான சூத்திரர் பஞ்சமர்களோடு பிராமணர்கள் கலந்து வசிக்கக் கூடாது; தனிக் குடியிருப்பு வேண்டுமென்று பேசி இருப்பது சர்வதேச அளவில் தடை செய்யப்பட்டுள்ள இன ஒதுக்கல் கொள்கையே ஆகும். இது சர்வதேச குற்றம்.

சமத்துவபுரம் வேண்டுமென்று வலியுறுத்தும் தமிழ்நாட்டில் ‘அக்ரகாரம்’ வேண்டுமென்று சங்கராச்சாரி பேசியிருக்கிறார். இதைக் கண்டித்து சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மயிலாடுதுறையில் கடந்த மார்ச் 22-இல் கூடிய திராவிடர் விடுதலைக் கழக மாநாடு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

தமிழ்நாட்டில் பல கிராமங்களில் ஜாதி ஆதிக்க சக்திகள் தலித் மக்களின் அன்றாட வாழ்வியலுக்கான அடிப்படை சிவில் உரிமைகளைப் பறித்து வைத்திருக்கின்றன. தீண்டாமையை பல வடிவங்களில் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். ரேசன் கடை நடத்துதல், முடி திருத்தும் கடை நடத்துதல், உணவகங்கள் நடத்துதல், இருசக்கர வாகனங்களில் பயணம் செய்தல் போன்ற அன்றாட வாழ்வு முறையில் திணிக்கும் இந்த தீண்டாமைக் கொடுமைகள் மீது உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். கண்டும் காணாத போக்கு நீடிக்கக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்வரின் மாநில உரிமைப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் கட்சிகளைக் கடந்து ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என்றும் மயிலாடுதுறை மாநாடு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

அதேபோல் தொலைக்காட்சிகளில் ஜாதி வரன் தேடும் விளம்பரங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்களைக் கழகத் தோழர்கள் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி மக்களிடம் பரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஒத்த கருத்துள்ள இயக்கத் தோழர்களையும் அழைத்துப் பேச வைக்கலாம்.

கொளத்தூர் மணி, தலைவர்
விடுதலை இராசேந்திரன், பொதுச்செயலாளர்
திராவிடர் விடுதலைக் கழகம்.

## மோடிக்கு ஆர்எஸ்எஸ் எதிர்ப்பா?

மோடி பதவியேற்ற 11 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக நாக்பூர் ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் சென்று உள்ளார். ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும் மோடிக்கும் ஏதோ முரண்பாடு இருப்பது போலவும் மோடி பதவி விலக ஆர்.எஸ்.எஸ். நிர்பந்திப்பது போலவும் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. மோடி போய் வேறு எந்த ஜோடி வந்தாலும் அவர்கள் நிறைவேற்றப் போவது ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தங்களை மட்டும் தான். மோடி ஆர்.எஸ்.எஸ்.-ன் கொள்கைகளைத் தான் தனது ஆட்சியில் அமல்படுத்தி வருகிறார்.

இதில் முரண்பாடுகள் மோதல்கள் என்று சொல்வதெல்லாம் வெறும் பித்தலாட்டமான செய்திதான். ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தைத் தான் மோடி ஆட்சி அமல்படுத்துகிறது என்பதில் இருந்து திசைத் திருப்பி மோடிக்கு ஆர்.எஸ்.எஸ்.-க்கும் மோதல் என்பது போன்ற செய்திகளை உருவாக்கி அடிப்படையான கருத்துக்களை திசைமாற்ற பார்க்கிறார்கள்.

## சென்னை: பூணூல் அறுப்பு வழக்கு தள்ளுபடி!

திரிபுராவில் பாஜக ஆட்சிக்கு வந்தவுடன், லெனின் சிலையை அகற்றியதுபோல, தமிழ்நாட்டில் பெரியார் சிலைகள் அகற்றப்படும் என்று 2018-இல் ஆணவத்தோடு சமூக ஊடகத்தில் பதிவிட்டார் எச்.ராஜா. இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியது. சென்னை மாவட்டத் தோழர்கள் எச்.ராஜாவின் பேச்சுக்கு எதிர்வினையாக தியாகராயா நகர், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதியில் பார்ப்பனர்களின் பூணூலை அறுத்ததாக வழக்கு தொடரப்பட்டது. அசோக் நகர் காவல் நிலையத்தில் தொடரப்பட்ட இந்த வழக்கு 8 ஆண்டுகளுக்குப் பிறகு, சைதாப்பேட்டை 17-வது நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

10 தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். உமாபதி, சுகுமார், இராவணன், கோபி, ஜான், அருண், பிரதீப், பிரபாகரன், திவாகர், நந்தா ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் 7 தோழர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டம் போடப்பட்டு 6 மாதங்கள் சிறை தண்டனைப் பெற்றனர். வழக்கறிஞர் இளமாறன், உதவியாளர் பேரன்பு ஆகியோர் வழக்கை சிறப்பாக நடத்தினார்கள்.

அதேபோல, 2008-இல் கர்நாடக தமிழர்கள் தாக்கப்பட்டதற்கு எதிர்வினையாக ராஜ்பவன், வெல்கம் உணவகங்களை முற்றுகையிட்டு சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவ்வுணவகங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக தோழர்கள் உமாபதி, தமிழ்செல்வன், தட்சணாமூர்த்தி, கார்த்திக், ஜெயக்குமார், ஜெயராம், சுரேஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டு, பின்னர் ஒருமாதத்திற்கு பின்னர் பிணையில் வெளிவந்தனர். எழும்பூர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. இந்த வழக்கிலும் பிப்ரவரி 10-ஆம் தேதி தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். வழக்குரைஞர் ஜான் சிறப்பாக வாதாடி, தோழர்களை வழக்கில் இருந்து விடுவித்தார்.

# தலையங்கம்

# காஞ்சி விஜயேந்திரனின் 'இன ஒதுக்கல்' APARTHEID!

பெங்களூரில் மூவாயிரம் பார்ப்பனர்கள் திரண்ட 'கர்நாடக பிராமண மகா சபாவில்' (19/01/2025) பேசிய காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திர சரஸ்வதி 'பிராமண வெறியை' தூண்டி விட்டு இருக்கிறார். அவர் இந்து மதம் பற்றி பேசவில்லை; வேதமதம் பற்றி பேசியிருக்கிறார். வேத மதம்தான் சனாதனம் என்றும் 'பிரமாணிசம்' மட்டுமே வேத மதத்தைக் காப்பாற்றும் என்பதால் 'பிராமணர்கள்' ஒன்றுபட வேண்டும் என்றும் பேசியிருக்கிறார். 'பிராமணர்கள்' தங்கள் பிறவி அடையாளங்களை உறுதி செய்ய மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை முறைகளையும் பட்டியலிட்டுள்ளார்.

"1. ஒவ்வொரு நாளும் தங்களுக்கு உரிய வேத சடங்குகளை வீட்டில் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். வீட்டில் சமைத்த உணவுகளையே சாப்பிட வேண்டும்.

2. பிராமணர்கள் வெளிநாடு போகக்கூடாது.
(கடல் தாண்டுவது குற்றம் என்று சாஸ்திரம் கூறுகிறது). இங்கேயே தங்கி சனாதன கலாச்சாரத்தைக் காப்பாற்ற வேண்டும்.

3. 'பிராமணர்கள்' மட்டுமே குடியிருக்கும் 'அக்கிரகாரங்களை' உருவாக்க வேண்டும். சுமார் 100 பிராமணர்கள் வசிக்கக் கூடிய தனிக் குடியிருப்புகள்(gated communities) உருவாக்க வேண்டும். ஆச்சாரமான உடைகளை (மடிசார், பஞ்சகச்சம்) அணிவதோடு குழந்தைகளை 'வேத' பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும்.

4. கிராமத் தொடர்புகளை துண்டித்துவிடக் கூடாது. கிராமங்களில் ஆசிரியர்களாக, தலைவர்களாக இருந்து சனாதன பாதையில் மக்களை வழிநடத்த வேண்டும்.

5. தங்களின் குலம் மற்றும் கோத்திரங்களை ஆவணப்படுத்திப் பாதுகாக்க வேண்டும்.

6. கலை இலக்கியங்களைப் பயன்படுத்தி சனாதனத்தை பரப்ப வேண்டும்.

7. கடந்த காலங்களில் காஷ்மீர் உட்பட அதிகார மய்யங்களில் நாம்தாம் இருந்தோம்." மீண்டும் அந்த நிலை வர வேண்டும்.

இப்படி பச்சையாக 'பிராமணர்' என்ற வர்ணத்தின் அடிப்படையில் பேசியிருக்கிறார். மனுசாஸ்திரப்படி 'பிராமணன்' என்ற அடையாளம் ஏனைய மக்களை சூத்திர பஞ்சமர்களாக இயல்பாகவே இழிவுபடுத்துகிறது.

வர்ணாஸ்ரம பாகுபாடு என்ற எல்லையோடு அவர் நிற்கவில்லை. 'பிராமணர்கள்', 'பிராமணர்கள்' அல்லாதவரோடு கலந்து உறவாடக்கூடாது;
ஒன்றாக குடியிருக்கக் கூடாது, உணவருந்தக் கூடாது (வீட்டிலியே சமைத்து சாப்பிட வேண்டும்) என்று இன ஒதுக்கலை (apartheid) அவர் பேசி இருக்கிறார்.

தென்னாப்பிரிக்காவில் வெள்ளை நிற வெறியர்கள் கறுப்பின மக்கள் மீது "இன ஒதுக்கல்" கொள்கையை 1948 முதல் திணித்து வந்தனர். உலகம் முழுவதும் இதை எதிர்த்தது. கறுப்பின மக்கள் உறுதியுடன் நெல்சன் மண்டேலா தலைமையில் போராடினர். மண்டேலா 25 ஆண்டுகள் சிறைப்படுத்தப்பட்டார். 1990 இந்த 'இன ஒதுக்கல்' முடிவுக்கு வந்தது.

ஐ.நா.சபை 1966–இல் 'இன ஒதுக்கல்' மனித குலத்துக்கு எதிரானது என்று அறிவித்தது. 1994–ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் நெல்சன் மண்டேலா தென் ஆப்பிரிக்காவில் அதிபராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். வெள்ளை நிறவெறி ஆதிக்கம் சர்வதேச அழுத்தத்திற்கு பணிந்தது என்பது வரலாறு.

சமூக அரசியல், பண்பாட்டுத் தளத்தில் சமூக ஆதிக்கக் கொடுமையை எதிர்த்துப் பெரியார் குரல் கொடுத்தார். பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தைக் கைவிட்டு, பார்ப்பனர் அல்லாத மக்களை சமத்துவமாக ஏற்க முன்வர வேண்டும் என்று போராடினாரே தவிர 'இன ஒதுக்கலை' பெரியார் பேசவில்லை. ஆனால் சங்கராச்சாரிகளோ பார்ப்பனர் அல்லாத மக்களை தனிமைப்படுத்தி இன வெறுப்பையும் 'இன ஒதுக்கலையும்' பேசுகிறார்கள்.

2024–ஆம் ஆண்டு நவம்பர் 3 அன்று "சென்னையில் 'பிராமணர்கள்' தங்களை பாதுகாக்க தனிச் சட்டம் வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அங்கே என்ன பேசப்பட்டது? "பிராமணர்கள் உணர்வு அழிக்கப்படுகிறது, இதுவும் இனப்படுகொலைதான்" என்று பேசினார்கள். அது என்ன 'பிராமண' உணர்வு ? அதைத்தான் இப்போது காஞ்சி விஜயேந்திரன் அம்பலப்படுத்தியுள்ளார். அதாவது தங்களுக்கு கீழான பார்ப்பனர் அல்லாத மக்களை 'இன ஒதுக்கல்' செய்வதுதான் அவர்களின் உணர்வு.

1911–இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்ற "தமிழ்நாட்டு பிராமணர்கள்" தங்களுக்கென்று தனி இடம், தனி சமையல் வேண்டும் என்று கேட்டனர். தாங்கள் 'போஜனம்' செய்வதை பிற ஜாதி காங்கிரஸ்காரர்கள் பார்த்துவிடக் கூடாது என்று திரையிட்டு மூடிக் கொண்டனர். இதை காந்தியே கண்டித்து 'யங் இந்தியா' பத்திரிக்கையில் எழுதினார்.
காங்கிரஸ் கட்சி நடத்திய சேரன்மாதேவி குருகுலத்தில் பார்ப்பன வீட்டுக் குழந்தைகளுக்கு தனி இடத்தில் உணவு வழங்கப்பட்டதை எதிர்த்து பெரியார் போர்க்கொடி தூக்கினார்.

காங்கிரஸ் கட்சித் தலைவராக பெரியார் சுற்றுப்பயணம் செய்தபோது, குற்றாலம், பெரியகுளம் போன்ற ஊர்களில் பார்ப்பன வீடுகளில் பெரியாருக்கு மட்டும் தனியாக உணவு போடப்பட்டது. மூன்று வேளையும் அவர் சாப்பிட்ட எச்சில் இலைகளையை எடுக்காமல் அப்படியே விட்டு விட்டனர்.

தொடர்வண்டி நிலைய உணவு விடுதிகளில் பார்ப்பனர்களுக்கு மட்டும் தனி இடம் ஒதுக்கப்பட்டது. 19–ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் இந்த நிலை இருந்தது. பெரியார் எதிர்த்துப் போராடிய பிறகு 1940–இல் இந்த பாகுபாடு ஒழிக்கப்பட்டது.

சென்னை கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவமனையில் கூட 'பிராமண' மன நோயாளிகள் ஏனைய மன நோயாளிகளிடமிருந்து பிரித்து தனியாக வைக்கப்பட்டனர். இப்படி நீண்ட பட்டியலிட முடியும். செயற்கை நுண்ணறிவு காலத்தில் கூட பார்ப்பனர்கள் பிறவி ஆணவத்தைக் கைவிடத் தயாராகவில்லை.

தனிக் குடியிருப்பு பேசும் 'பிராமணர்கள்' தங்கள் வீடுகளின் கட்டுமானத்தை அவர்களே கட்டிக் கொள்வார்களா? பராமரிப்பு வேலைகளை அவர்களே செய்து கொள்வார்களா? வீதிகளை சுத்தம் செய்ய 'பிராமணர்கள்' வருவார்களா ?

அனைத்து ஜாதியினரும் ஒன்றுபட்டு வாழும் 'சமத்துவபுரம்' திட்டங்களை தமிழ்நாட்டில் உருவாக்கி வரும் நிலையில் அதற்கு நேர் முரணாக அக்ரஹாரங்கள் உருவாக வேண்டும் என்ற இனவெறிக் குரல் கேட்கிறது. இந்த இன ஒதுக்கலைக் கண்டித்து சங்கராச்சாரி மீது நடவடிக்கை கோரி திராவிடர் விடுதலைக் கழகம் எதிர்வரும் ஏப்ரல் 21 அன்று தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறது.

பெரியாருக்கு எதிராக முன்வைக்கும் அவதூறு பிரச்சாரங்களை ஊதிப் பெருக்கும் பார்ப்பனிய ஊடகங்கள் சங்கராச்சாரியின் திமிர்ப்பேச்சை இருட்டடிப்பு செய்து விட்டதை சுட்டிக்காட்டுகிறோம்.

ஜனநாயக சக்திகளும் வர்ணாசிரம எதிர்ப்பாளர்களும் பார்ப்பன சமுதாயத்திலேயே மாற்றத்தை விரும்பும் முற்போக்கு சிந்தனையாளர்களும் இந்த இன ஒதுக்கலை எதிர்த்துக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

## காந்தியை தாழ்வாரத்தில் உட்கார வைத்த சீனிவாச ஐயங்கார்

நீதிக்கட்சித் தலைவர்களான பன்னீர்செல்வமும் உமாமகேசுவரம் பிள்ளையும் காந்திஜியைச் சந்தித்துப் பேசிய உரையாடல் "சுதேசமித்திரன் (16.09.1927)" இதழில் அந்தக் காலத்தில் விவரமாக வெளியாகியிருந்தது. சுருக்கத்தைப் படித்துப் பார்ப்பது கூட இப்போது சுவையாக இருக்கும்.

**உமா மகேசுவரம்பிள்ளை:** பிராமணர் – பிராமணரல்லாதார் விவகாரம் வரவரச் சிக்கலாகி வருகிறது. தலைவர்கள் இதில் தலையிட்டு, சமாதானத்தை உண்டு பண்ண வேண்டும்.

**காந்தி:** பிராமணரல்லாதாரே இந்த இயக்கத்தைப் பற்றிப் பலவிதமாகக் கூறுகிறார்கள். பிராமணர்-பிராமணரல்லாதாருக்கிடையே இப்போது வேறுபாடுகள் இருந்தாலும் சிறிது காலத்தில் அவை மறைந்துவிடும் என்று டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறுகிறார். என்னைப் போன்றவர்கள் இதில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஈரோடு இராமசாமி நாயக்கர் தென்னாட்டில் பிராமணர் கொடுமை அதிகமாக இருக்கிறதென்றும், என்னைப் போன்றவர்கள் இதில் அவசியம் தலையிட்டு, மன நிறைவு தரக்கூடிய ஒரு முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இப்போது பிராமணர்களிடத்து முற்போக்கான கொள்கைகள் பரவி வருவதைக் காண்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் நான் சென்னைக்கு வந்தபோது, சீனிவாச ஐயங்கார் வீட்டில் தாழ்வாரத்தில்தான் உட்கார்ந்திருந்தேன், இப்போது, அவர் வீட்டை என் வீடாகவே நினைத்துப் பழகி வருகிறேன். என் மனைவி அவர்களுடைய அடுப்பங்கரைவரை செல்கிறாள். என்று கூறினார்.

*(ஆதாரம் : தமிழ்நாட்டில் காந்தி, ஆசிரியர்: ராமசாமி பி.ஏ).*

## பஞ்சாங்கப் புரட்டு அம்பலம்!

தமிழ்நாடு அரசியலில் " கூட்டணிப் பெயர்ச்சிகள்" தொடங்கி உள்ளன. மக்கள் குழம்பி நிற்கிறார்கள் அதே போல் "சனிப் பெயர்ச்சியிலும்" குழப்பங்கள். வரும் ஏப்ரல் 29–ஆம் தேதி சனிப்பெயர்ச்சி நடக்கிறது என்று 'த்ருக்' பஞ்சாங்கம் கூறுகிறது. வாக்கிய பஞ்சாங்கம் இந்த ஆண்டு சனிப்பெயர்ச்சி இல்லை என்று கூறுகிறது. திருநள்ளாறு சனி பகவான் கோயில் நிர்வாகம் இந்த ஆண்டு சனிப்பெயர்ச்சி இல்லை என்று கூறிவிட்டது. ஏனைய சோதிடர்கள் உண்டு என்று கூறுகிறார்கள்.

அன்றாடம் ராசி பலன்களை நம்பும் நம்பிக்கையாளர்கள் குழம்பிப் போய் நிற்கிறார்கள். பஞ்சாங்கங்கள் அறிவியலுக்கு எதிரானது என்பதற்கு இதுவே சான்று. அறிவியல் என்றால் ஒரு கருத்துதான் இருக்க முடியும்

விண்வெளியில் நிகழும் மாற்றங்களை அறிவியல் ரீதியாக 'geo-centric.com' என்ற இணையதளம் விளக்குகிறது. ஆனால் இது மக்களுக்கான கிரகப் பலன்களைக் கூறாது. காரணம், அது அறிவியல் அல்ல மக்களோ பஞ்சாங்கத்தைதான் நம்புகிறார்கள் அறிவியலை மறுக்கிறார்கள். சனிப்பெயர்ச்சி போல் கூட்டணி பெயர்ச்சியும் மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறது.


### பெரியார் முழக்கம் சந்தாக்களை

விரைந்து அனுப்புவீர்...

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

ஆண்டு சந்தா : ரூ.300/–

ஐந்தாண்டு சந்தா : ரூ.1500/–

தொடர்புக்கு : 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை – 600096. பேச : 63697 76351.

# காஞ்சி சீனியரின் “நச்சுக் கருத்துக்கள்”

**பார்ப்பனர் என்றால் எல்லோரையும் சமமாகப் பார்ப்பவர்கள் என்று கூறும்**



***பார்ப்பன அடிமைகளே! இதோ காஞ்சி சீனியர் சந்திரசேகரேந்திர சரஸ்வதியின் கருத்துக்களை தொகுத்துத் தந்து இருக்கிறோம் இதற்கு என்ன பதில்....***

## “நான்கு வர்ணம் தேவையே!”

*சங்கராச்சாரியார் ‘தெய்வத்தின் குரல்’ என்ற நூலிலே வெளிப்படையாகவே சொல்லு கின்றார். “நம் மதத்தில் (இந்துமதம்) ‘பிராமணர்’, ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த “வர்ணங்களை நாம் “ஜாதி” என்கிறோம்.*

*வாஸ்தவத்தில் ஜாதி வேறே, வர்ணம் வேறே: வர்ணங்கள் மேலே சொன்ன நான்குதான். இதற்குள்ளேயே ஒவ்வொன்றிலும் பல ஜாதிகள் இருக்கின்றன. “பிராமண” வர்ணத்திலேயே அய்யர், அய்யங்கார், ராவ் என்று பல சாதிகள் இருக்கின்றன. நான்காம் வர்ணம் ஒன்றிலேயே முதலியார், பிள்ளை, ரெட்டி, நாயக்கர், நாயுடு, கவுண்டர், படையாட்சி என்கிற மாதிரி எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன.*

*நான்கு ஜாதிகளுக்கும் (அதாவது வர்ண ங்களுக்கும்) சாஸ்திரங்களில் வெவ்வேறு விதமான கர்மாக்களையும் ஆசாரங்களையும் விதித்திருக்கிறது. இதனால் ஒரே மதத்தினரிடையிலேயே ஏகப்பட்ட வித்தி யாசங்கள் உள்ளன. ஒருவர் சமைத்ததை இன்னொருவர் சாப்பிடக் கூடாது; ஒருவரோடு ஒருவர் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. ஒருவர் செய்யும் காரியத்தை மற்றொருவர் செய்யக் கூடாது என்று இப்படி எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன.*

*நமக்குள்ளேயோ ஒரே மதமாக இருந்தாலும் விதிகளும் நிஷேதங்களும் பல வகைகளாக இருக்கின்றன. ஒரு காரியத்தை ஒருவன் செய்தால் தர்மமாகிறது. அதையே வேறொருவன் செய்தால் அதர்மம் என்கிறோம்” என்று சொல்கிறார். எனவே இதிலிருந்து இன்னமும் குலதர்மத்தை நியாயப்படுத்தத்தான் சங்கராச்சாரியார் இருக்கிறார் என்பது தெளிவாகிறது.*

## வேதம் பிராமணர்களுக்கு மட்டுமே”

*“வேதம் அதிலே அதிகாரம் பெற்றவர்களிடத்தில் மட்டும் பேசிற்று, இன்னின்ன பாகங்களை நீங்கள் மறைவாகப் போற்றி வாருங்கள் என்று அதிகாரிகளுக்கு சொல்லிற்று. தமிழ் பாஷை வேதியர்களுக்கு மட்டும் எடுத்துக் கொள்ளாமல் சமஸ்த ஜன சமூகத்தை எடுத்துக் கொண்டு பேசும்போது- எப்படி வேதமானது பிராமணர்களுக்குள்ளேயே சில பாகங்களை ரஹஸ்யமாக இரட்சிக்க வேண்டும் என்றதோ அதேமாதிரி சகல வருணத்தாரையும் எடுத்துக்கொள்ளுகிறபோது வேதம் முழு வதையும் அதில் அதிகாரமுள்ளவர்கள் - அதிகாரமில்லாதவர்களிடமிருந்து ரஹஸ்யமாக இரட்சிக்க வேண்டுமென்று கருதியே முழுவதற்கும் “மறை” என்று பெயர் கொடுத்துவிட்டது.*

*எல்லோருக்கும் என்று (democratise) பண்ணிவிடக் கூடாது. என்பதுதான் தமிழ் ஜனங்களின் தொன்று தொட்ட அபிப்ராயம் என்பது “மறை” என்ற இந்த வார்த்தையிலிருந்தே தெரிகிறது” ஆகவேதான் இது ரொம்பவும் மிக முக்கியமானது என்று சொல்லுகிறார். இதிலிருந்து மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதுதான் வேதம் என்கிறார். தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகம் வேதமும் தமிழ்நாடு என்ற தலைப்பில் கூறுகிறார்*

## “நாத்திகர்களுக்கு மருத்துவம் செய்யாதே”

*இது “தெய்வத்தின் குரல்” மூன்றாவது பாகம். இதில் 148-ஆவது பக்கத்தில் “தெய்வப் பணியும், மக்கட் பணியும்” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.*

*மருத்துவம் அனைவருக்கும் தேவை என்றுதான் மனிதநேயம் கொண்ட எவருமே கூறுவார்கள். ஆனால் காஞ்சி சங்கராச்சாரி நாத்திகர்களுக்கு மருத்துவமே செய்யக் கூடாது என்கிறார். “நாஸ்திகளுக்கு வைத்தியம் பண்ணி ஆயுளை நீடிக்கச் செய்தால் அவன் மேலும் நாஸ்திக பாவத்தை விருத்தி செய்துகொள்ள இடம் தருவதாக ஆவதால் அவனுக்கு வைத்தியம் பண்ணாதே” என்று ஆயுர்வேத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது.*

*ஆனபடியால் மக்கள் பணியெல்லாம் அந்த மக்களை பகவானிடம் சேர்ப்பதற்குத்தான். அதனால், எல்லோருமாகச் சேர்ந்து ஆலயத் திருப்பணி செய்தால், மெய் வருந்தி ஒரு கோயிலுக்கு மதில் கட்டினால், அதுதான் ஜனங்களுக்கு மஹா பெரிய ச்ரமதானம்,” -எனவே இவருடைய தத்துவப்படி நாஸ்திகனுக்கு வைத்தியம் செய்யக்கூடாது.*

*மேலும் மூன்றாம் பகுதி 734-ஆவது பக்கத்தில் விரிவாகச் சொல்கிறார். “ஆயுர்வேதத்தில் இந்த விஷயம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. “நாஸ்திகனுக்கு வைத்தியம் செய்யாதே” என்று அதில் சொல்லியிருக்கிறது. அது இந்த உள்ளர்த்தத்தில்தான். கேட்கிறபோது, இதென்ன? கருணையேயில்லாமல் இப்படிச் சொல்லியிருக்கே!. என்று தோன்றலாம். ஆனால் உண்மையில் இப்படிச்சொன்னதே கருணையில்தான்”*

*“வியாதியில்தான் கஷ்டம் தெரிகிறது. கஷ்டம் என்று வரும் போதுதான் எப்படியாவது அதிலிருந்து மீளவேண்டுமென்ற தவிப்பில். “கடவுள் இருப்பது நிஜமானால், வேத சாஸ்திரம் இருப்பது நிஜமானால் என்னை அவன் காப்பாற்றட்டும் நான் அப்புறம் வேத சாஸ்திரப்படி பண்ணுகிறேன்” என்று ஒரு நாஸ்திகன் நினைக்க முடிகிறது.” “வைத்தியன் சிகிச்சை பண்ணமாட்டான் என்று வைத்துவிட்டால் அப்போது நாஸ்திகன் பகவான் பக்கம் திரும்பத்தான் செய்வான்.”*

## “பிராமணனுக்கு தூக்குத்தண்டனை கூடாது”

*“பிராமணனு”க்குக் கொலை தண்டனை கொடுக்கக் கூடாது என்பதுதான் நியாயம் என்கிறார்; எப்போது? இந்த இருபதாம் நூற்றாண்டில் என்பதை மறந்து விடாதீர்கள்! இப்பொழுது அவரின் உண்மை வடிவத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுங்கள்.*

*அப்படித் தோன்றினால் அது நியாயந்தான். ஆனாலும் இதன் காரணத்தைப் புரிந்து கொண்டால் இதிலே அநியாயப் பக்ஷதாபமில்லை என்று தெரியும்” என்று சொல்லுகிறார் சங்கராச்சாரியார். இதன் மூலம் ‘பிராமணனு’க்குத் தண்டனை கொடுப்பது நியாயமில்லை.*

*“குற்றவாளிக்கு ராஜ தண்டனையே பிராயச்சித்த கர்மா ஆகிறது என்றேன். ‘பிராமணன்” வேதமந்திர ரக்ஷணையையே வாழ்க்கையாகக் கொண்டவன். ஒரு நாள்கூட அவனைவிட்டு இந்த வாழ்க்கை ஆசாரம் போகக்கூடாது அப்படிப் போனால் அது தேச க்ஷேமத்துக்கே கெடுதல் . ஜெயிலில் போட்டால் அவன் எப்படித் தன் ஆசாரங்களுக்கு பங்கமில்லாமல் மந்திர ரக்ஷணை பண்ணமுடியும்?”*

*கண்ணை வாங்கி, காலை வாங்கி அவனைத் தண்டித்தால் அப்போதும் அவனால் ஆகிற வேதரக்ஷணம் அல்லவா கெட்டுப்போகும்? வேததர்மம் இருக்கவேண்டும் என்பதற்குத்தான் ராஜாங்கம் இருப்பதே. அதுவே தன் லக்ஷ்யத்துக்கு ஹானி செய்யலாமா? அதனால்தான் ராஜ சிக்ஷையை தூக்குத் தண்டனையை “பிராம்மணனு”க்கு ரொம்பவும் குறைத்துச் சொல்லியிருப்பது ஆனால், அதற்காக அவனை வெறுமனே விட்டு வைத்து விடவில்லை” என்று சங்கராச்சாரி “தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகத்தில்” கூறுகிறார்.*

## “ஜாதி தொழிலையே செய்ய வேண்டும்”

*“முன்பு வர்ண தர்மத்தைப் போஷிப்பதிலேயே ராஜா பெருமைப்பட்டானென்றால் இப்போது அரசியலிலோ, ஸமூஹ வாழ்விலோ ஆனா ஆவன்னாவே “casteless Society” “ஜாதியில்லா ஸமூஹம்” என்பதாகத்தானிருக்கிறது அந்தந்த ஜாதிக்குண்டான தொழிலை அவரவர் செய்யாமலும் ஜாதிகளை மட்டும் விடாமல் வைத்துக் கொண்டிருப்பது மகா தப்புதான் ப்ராணன் போனபின் பிணத்தைக் கட்டிக்காக்கப் பார்க்கிறது போலத்தான்.*

*இதில் நாம் சீர்திருத்தக்காரரோடு நூறு பெர்ஸென்ட்டும் ஒத்துப் போவோம். ஆனால் இந்தத் தொழில் பாகுபாடே தப்பு-ஆசார அநுஷ்டானங்களையே இதற்காக வித்யாஸமாய் வைப்பது தப்பு என்று அவர்கள் வாதிப்பதை நாம் கொஞ்சங்கூட ஒப்புக்கொள்வதற்கில்லை. தொழில் பாகுபாடும், ஆசாரங்களைச் சாஸ்திரப்படி அவாளவாள் பின்பற்றுவதும் மாறி இப்போதுள்ள நிலைமை ஏற்பட்டுவிட்டது தான் தப்பு என்று விவேகத்தோடு புரிந்து கொள்ளவேண்டும்.*



Kanchi seer asks Brahmins to work unitedly

Times News Network

Bengaluru: Emphasizing the role played by Brahmins in protecting and promoting Vedic religion and culture, Kanchi Kamakoti Peetham pontiff Jagadguru Sri Shankara Vijayendra Saraswathi Swami said it was time the community members collaborated for personal and collective development.

Addressing a 3,000-plus gathering at an Akhila Karnataka Brahmana Mahasabha event at Palace Grounds on Sunday, the pontiff said the community members were facing economic difficulties and losing their voice in the propagation of dharma after independence. In this backdrop, he urged Brahmins to work unitedly for social and spiritual progress. While exhorting the community to play a vital role in promoting Sanatana Dharma, the pontiff said: "For the Vedic religion to be stable, there should be Brahmanism."

JAGADGURU'S 7 SUGGESTIONS TO COMMUNITY

1 Don't outsource practices
Dharma is fundamental to our nation and Brahmins must play a pivotal role in promoting Sanatana Dharma. Practices like sandhya vandana, Gayatri worship, agni puja, hospitality and cooking at home must not be outsourced but upheld in daily life.

2 Strive to remain in India
Brahmins should strive to remain in India, where their presence is vital for preserving the nation's spiritual and cultural heritage. Bharat should be strengthened by those contributing to the country's growth and education, including sponsoring students' Vedic studies.

3 Consider gated communities
Brahmins should consider creating 'agraharas' or gated communities, where 50-100 families can live together in mutual cooperation. This will foster a strong, organized society focused on culture, education and science. Following the Vedic path and protecting the religion must be at the forefront.

4 Counter negative portrayal
Brahmins must ensure that their portrayal in media and movies is dignified and respectful. To counter negative depictions, Brahmins should engage more in fields like music, art and cinema, showcasing their contributions to society.

5 Maintain village ties
Brahmins must stay connected with rural communities, especially by serving as teachers or community leaders in villages. If Brahmins abandon their village roots, there will be a loss of guidance and leadership in rural India.

6 Uphold standards
Establishing detailed records of Gotras in every household and temple will preserve the cultural heritage. Upholding standards in dress, address, and temple management will contribute to the promotion of dharma.

7 Greater presence in administration
During ancient times, Brahmins had a place in all palaces throughout the country including in Kashmir. But now Brahmins are facing difficulties because of bad policies. In power circles, Brahmins should be given a proper place to protect and promote dharma.

*“இப்போது எல்லாம் அடியோடு குளறிப் போய்விட்ட ஸ்திதியில் பழைய படி பண்ணுவது ஸாத்யமா”? என்றால், எனக்குத் தெரியாது, ஸாத்யமில்லை என்று விடாமல் இப்போதாவது எங்கே எவ்வளவு முடிகிறது என்று பார்த்து அங்கே அந்த அளவுக்குப் பழைய வழிக்குத் திருப்பத்தான் பாடுபடனும்” “தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகத்தில்” கூறுகிறார்.*

## “தேவதாசி முறை வேண்டும்!”

*“தெய்வத்தின் குரல்” மூன்றாவது பாகம், இதில் ‘சாதிதர்மம்’ என்ற தலைப்பின் கீழ் எழுதுகின்றார்; (பக்கம் -806)*

*“ஈச்வரனுக்கு நாட்டிய உபசாரம் நடக்கவேண்டு மென்பதால்தான் தேவதாஸிகள் என்று ஏற்பட்டது. “தேவ தாஸி” என்பதற்கு நேர் தமிழ் “தேவு அடியாள்” ஈச்வரனின் அடிமை என்று அர்த்தம்.*

*அவனையே கல்யாணம் பண்ணிக்கொண்டதாகப் பொட்டுக் கட்டிக்கொண்டு அவனுக்கு ந்த்யோபசாரம் பண்ணவேண்டியவள். நடைமுறையில் இது வேறு எப்படியோ போய்விட்டது. தேவதாஸி தடுப்புச் சட்டம் என்றே ஸமீபத்தில் சர்க்கார் செய்யவேண்டியதாயிற்று. தேசத்தின் ஒழுக்கத்தைக் காப்பாற்ற இப்படிச் சில கார்யம் பண்ணவேண்டியிருக்கிறது. ஆனாலும் சாஸ்திரப் பூர்வமாக விதித்த ஒரு உபசாரம் ஸ்வாமிக்கு நடப்பதற்கில்லாமல் ஆகிவிட்டதே என்றும் இருக்கிறது” என்று சங்கராச்சாரியார் வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார்.*

## “ஜாதி சமுகத்துக்கு அவசியம்”

*தெய்வத்தின் குரல்” 3 ஆவது பாகத்தில் 807-ஆவது பக்கத்தில் “இந்தக் காலத்தில் எதற்கெடுத்தாலும் ஜாதி போக வேண்டுமென்பதே முழக்கமாயிருந்தாலும், வாஸ்தவத்தில் ஸமூஹத்துக்கு அவசியமான ஒவ்வொரு தொழிலுக்கும் என்றே ஒவ்வொரு ஜாதி என்ற ஏற்பாட்டைப் போல பொது சமுதாய கார்யம் சீராக நடைபெற ஒரு Alter-native வும் இல்லை. தப்பு நடந்தாலும் அதுவும் ஒரு சின்ன வரம்புக்குள் Localise ஆகிவிடும்; அதை சரிசெய்துவிடலாம். ஜாதியில்லை என்று எடுத்தால். கட்டியிலே பிடிக்கிற சீழ் அந்த இடத்தோடு நிற்கும்படி தடுத்து ஆபரேட் பண்ணாமல் அதை தேஹம்பூராவும் ரத்த ஓட்டத்தோடு சேர்த்துவிடப் பண்ணிகிற மாதிரிதான் ஆகிறது.”என்று விளக்கம் சொல்கிறார்.*

*பிராமணனாகப் பிறந்தவன் உள்பட மற்ற எந்த ஜாதியினரும் பாட்டு, நடனம், நடிப்பு முதலியவற்றைத் தொழிலாக நடத்தப்படாது அதற்கு ஒரு ஜாதி என்று தொழில்களையெல்லாம் முறைகெட்டுப் போகாதபடி வரம்பு கட்டிக் காப்பாற்றியிருக்கிறது.” என்று சொல்லிவிட்டு -”இதை ஜீவனோபாயத் தொழிலாகவே பண்ணி, பணம், பரிசு. பட்டம் எல்லாம் வாங்க அதிகாரமுள்ளவர்கள் பரத ஜாதியினர்தான்.”- என்று இதற்கு ஒரு ஜாதியே இருக்க வேண்டுமென்று பச்சையாகச் சொல்கிறார்.*

## “சமபந்தி கூடவே கூடாது”

*“தெய்வத்தின் குரல்” மூன்றாவது பகுதி 624-ஆவது பக்கத்திலே அவர் சொல்லுகின்றார்: “உடன் உண்பவர்கள் என்ற தலைப்பிலே”*

*“இதைப்பற்றிச் சொல்லும்போது ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டோமென்று ஞாபகம் வருகிறது: ஆஹாரத்தோடு ஸம்பந்தப் பட்டவர்களைப் பற்றிச் சொல்லும்போது அதைச் சமைத்தவர்கள், பரிமாறுகிறவர்கள் ஆகிய இரண்டு பேரோடு கூட-கூடச் சாப்பிடுகிறவர்களையும் சொல்லியிருக்க வேண்டும் என்று சொல்லி அவரவர்களும் தனியே இருக்க வேண்டும் என்கிறார்.*

*வர்ணாசிரம விபாகத்தையும் கவனித்தாக வேண்டியிருக்கிறது. சைவ போஜனமே பண்ணவேண்டிய ஜாதிக்காரன் அசைவ போஜனம் அனுமதிக்கப்பட்ட ஜாதியாருடன் சேர்ந்து சாப்பிட்டால் என்ன ஆகும்? இப்படியெல்லாம் சீர்திருத்தம் பண்ணினால்தான் ஒற்றுமை உண்டாகுமென்கிறார்கள்.*

*எல்லாரையும் சேர உட்கார வைத்து நியமமில்லாத ஆஹாராதிகளைப் போட்டு விட்டால் ஒற்றுமை உண்டாகிவிடும் என்பதைக் கேட்க உலகத்தின் எல்லா தேசங்களையும் யுத்தத்தில் இழுத்துவிட்டு, ஜன சமுதாயத்துக்கே பெரிய சேதம் விளை வித்த World War - க்குக் காரணமாயிருந்த ராஜாங்கங்களெல்லாம் யுத்தப் பிரகடனம் செய்வதற்கு முதல் நாள் வரையில் பரஸ்பரம் விருந்து கொடுத்துக்கொண்டு, இவருக்கு அவர் டோஸ்ட் அவருக்கு இவர் ‘டோஸ்ட்’ என்று சேர்ந்து சாப்பிட்டு விட்டுத்தான் மறுநாளே ஒருத்தர் தேசத்தை இன்னொருத்தர் நாசம் பண்ண ஆரம்பித்தார்கள் - ராணுவம், ஸிவிலியன், பாபுலேஷன் என்ற விவஸ்தை இல்லாமலே!. இந்த தேக்கச்சேரிகளும், சிற்றுண்டி விருந்துகளும், கலப்பு போஜனங்களும் பிரயோஜனப்படுகின்றனவே தவிர, இதனால் ஒற்றுமையோ, ஸௌஜன்யமோ உண்டாகி விடவில்லை என்பது இந்தப் பழக்கங்கள் நம் தேசத்தில் ஏற்பட்டுப் பல வருஷங்களாகியும், இன்னமும் தினந்தினம் ஸமூஹச் சண்டைகள் ஜாஸ்தியாகிக் கொண்டு தானிருக்கின்றன.*

*பொதுச் சமையல், ஸமபங்க்தி என்று ‘சீர்திருத்தம்’ பண்ணுவதால் பிராணி ஹிம்ஸைதான் ஜாஸ்தியாயிருக்கிறது”- என்கிறார்.*

*(தொடரும்)...*

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பேரெழுச்சியோடு நடைபெற்ற பரப்புரைக் கூட்டங்கள்!

**விழுப்புரம்:** *17/03/2025 (திங்கள்)* கீழ்பெண்ணாத்தூர் கலைஞர் பேருந்து நிலையம், கடலாடிகுளம் பேருந்து நிலையம், செஞ்சி பேருந்து நிலையம், அப்பம்பட்டு மகூதி அருகில் நடைபெற்றது. காலை உணவு மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் தோழர் பொன்.சுப்ரமணி வழங்கினார். நம் பிரச்சார பயணத்தின் தலைப்பான பெரியார் ஏன் எதிரிகளை பதறவைக்கிறார் என்ற செய்தியை அவர்களின் சிந்தனைப் பலகையில் 17/3/2025 அன்றைய செய்தியாக எழுதி வரவேற்றனர், மேலும் ராமநாதன்,கோதண்டராமன், ஆதிமூலம், தமிழ் மக்கள் கட்சியை சார்ந்த முகிலன் அம்பேத்கர் மக்கள் கட்சி விழுப்புரம் மாவட்ட செயலாளர் சு.மழைமேனி பாண்டியன், பகுத்தறிவு கழகத்தை சார்ந்த துரை.திருநாவுக்கரசு, பேராசிரியர். ஜாக்குலின், வி.சி.க. விழுப்புரம் மாவட்ட செயலாளர் தனஞ்செழியன், திராவிடர் கழகத்தின் விழுப்புரம் மாவட்ட தலைவர் கோபண்ணா, பேராசிரியர் நந்தகுமார், தமுமுக அலிஜான் ஆகியோர் கலந்துக் கொண்டனர். தமிழக வாழ்வுரிமை கட்சியின் செஞ்சி சட்டமன்ற தொகுதியின் செயலாளர் ராசநாயகம், க.ராமர், பூ.ஆ இளையரசன், தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.



நிகழ்வின் துண்டறிக்கையைப் படித்துப் பார்த்து திமுகவின் கீழ்பெண்ணாத்தூர் நகரச்செயலாளர் C.K.அன்பு ரூ.1000 நன்கொடையாக வழங்கினார். பெரியார் சாக்ரடீஸ் ஒருங்கிணைத்தார். விசிகவைச் சார்ந்த பழனி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், தோழர்கள் தேநீர் வாங்கிக் கொடுத்து ரூ.150 பணம் நன்கொடை வழங்கினார். இரவு மாத்துர் திருக்கையில் பேராசிரியர் ஜாக்குலின், முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் அவர்களின் வீட்டில் இரவு உணவை வழங்கி, தங்குவதற்கு இடமும் அளித்தனர். 18/03/2025 செவ்வாய் காலை உணவும் அவர்களே தோழர்களுக்கு கொடுத்து பயணத்தை சிறப்பாக செய்யுங்கள் என்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர். விழுப்புரம் பயணக்குழு சார்பாக கழக வெளியீட்டு நூல்களை ஜாக்குலின் அவரது இணையர் செஞ்சி ராமச்சந்திரனுக்கு வழங்கினார்.

**18/03/25 (செவ்வாய்கிழமை) மூன்றாம் நாள் பிரச்சார பயணம்:** கஞ்சனூர் மும்முனை சந்திப்பு, விழுப்புரம் தந்தைபெரியார் சிலை, முகையூர் பேருந்து நிலையம், திருக்கோயிலூர் பேருந்துநிலையம் பகுதிகளில் நடைபெற்றது. விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ இளையரசன, தலைமைக் குழு அய்யனார், விசிக விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார், விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ இளையரசன், தமிழ்நாடு மாணவர் கழக கள்ளக்குறிச்சி மாவட்ட பொறுப்பாளர் கு.பாபா, கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவர் க.மதியழகன், கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் க.ராமர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.



மக்கள் அதிகாரம் விழுப்புரம் மாவட்ட செயலாளர் ஏழுமலை மற்றும் பொருளாளர் மகேஷ் கலைநிகழ்ச்சி நடத்தினர். விசிகவின் நகர செயலாளர் இரணியன் மற்றும் திருமால் ராஜ்குமார் கலையரசன், பிரதாப், குரு, கண்ணன், வழக்கறிஞர் லூசியா ஆகிய தோழர்கள் கலந்து கொண்ட கொண்டனர். ஆன்மிகப் பற்று மிகுந்த ஒருவர் ரூ.220-க்கு கழக வெளியீடுகளை வாங்கிச் சென்றார். விசிக விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் ரூ.1500 நன்கொடை வழங்கினார். மதிய உணவை திமுகவின் விழுப்புரம் நகர செயலாளர் சக்கரை ஏற்பாடு செய்து வழங்கினார்.

**19/03/2025 புதன்கிழமை** பகண்டை- வாணாபுரம் கூட்டு சாலை, சங்கராபுரம் மும்முனை சந்திப்பு, மூரார் பாளையம் பேருந்து நிலையம், கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகில் பிரச்சாரம் நடைபெற்றது. நிகழ்வில் கள்ளக்குறிச்சி மாவட்ட மக்கள் அதிகார அமைப்பின் மாவட்ட செயலாளர் தோழர் ராமலிங்கம், தபெதிக கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் செ.பிரபு, திவிக கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவர் க.மதியழகன், மாவட்ட செயலாளர் க.ராமர், விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ ஆ இளையரசன், தமிழ்நாடு மாணவர் கழக கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்பாளர் கு.பாபா, தலைமைக் குழு அய்யனார் உரையாற்றினார்.

இந்நிகழ்வின் போது பள்ளி மாணவ மாணவிகள் துண்டறிக்கையை ஆர்வமாக வாங்கிச் சென்றனர். அப்பகுதியின் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்க தலைவர் M.A.சங்கர் மற்றும் பவித்ரன் ஆகியோர் இணைந்து தோழர்களுக்கு பழச்சாறு வாங்கிக் கொடுத்தனர். மாவட்ட தலைவர் க.மதியழகன், மாவட்ட செயலாளர் க.ராமர், விழுப்புரம் திவிக தலைவர் பூ.ஆ இளையரசன் ஆகியோர் உரையாற்றினார்.

**20/03/2025 வியாழக்கிழமை** சின்ன சேலம் காமராஜர் சிலை, நையினார்பாளையம் காமராஜர் சிலை அருகில், வேப்பூர் கூட்ரோடு, கருவேப்பிலங்குறிச்சி மும்முனை பகுதிகளில் பிரச்சாரம் நடைபெற்றது. ClTU வை சார்ந்த தோழர் நாகராஜ் காலை உணவை வழங்கினார். தொடக்கமாக பறை இசையுடன் சாமிதுரை, நாகராஜ் பாடலை பாடினார். மாவட்ட தலைவர் தோழர் க.மதியழகன், மாவட்ட செயலாளர் க.ராமர், ClTU வை சார்ந்த தோழர் நாகராஜ், கடலூர் மாவட்ட தலைவர் மதன்குமார் தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் உள்ளிட்டோர் உரையாற்றினார். இசுலாமியராக இருந்து 1971-ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட புலவர் அய்யா ஹசன் அவர்கள் பயணத்தின் நோக்கத்தினை விளக்கிப் பேசினார்.

1971-இல் சேலம் மூட நடம்பிக்கை ஒழிப்பு பேரணியில் கலந்துகொண்ட தகவல்களை பகிர்ந்து கொண்டு, இது போன்ற பயணங்களை நடத்துவது அவசியம் என்று பயணக்குழுவை வாழ்த்தினார். மதிய உணவை மாவட்ட தலைவர் மதியழகன் ஏற்பாடு செய்து வழங்கினார். தோழர் அய்யனார் நிறைவுரை ஆற்றிக்கொண்டிருந்தபோது, ஜெயங்கொண்டம் பகுதியைச் சேர்ந்த கணேசன் என்பவர் 100 ரூபாய் நன்கொடை வழங்கி, சிறப்பான கருத்துக்களை எடுத்துரைத்தாகப் பாராட்டினார். ஆசிரியர் அறிவழகன் வீட்டில் இரவு தோழர்களை தங்க வைத்து, இரவு உணவு வழங்கினார்.

**21/3/2025 வெள்ளிக்கிழமை** காலை 10 மணியளவில் விருத்தாசலம் பேருந்து நிலையம், சேத்தியாதோப்பு பகுதி, புவனகிரி அம்பேத்கர் சிலை அருகில், சிதம்பரம் மும்முனை சந்திப்பில் பிரச்சாரம் நடைபெற்றது. பறை இசையுடன் நிகழ்வு தொடங்கியது. நாத்திகன் எழுதிய பாடலை தோழர் ராமர் பாடினார். அதனைத் தொடர்ந்து சாமிதுரை பறை இசை நிகழ்த்தினார். கடலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் மதன்குமார்,க.ராமர், கடலூர் மாவட்ட தோழர் போதிசத்வா பயணத்தின் நோக்கத்தினை விளக்கிப் பேசினார். கழக ஆதரவாளர்களான அசோக், சதிஷ், கிருபா ஆகியோர் இரவு உணவு வழங்கினார்கள். மேலும் தாய் ஊடகம் ஸ்ரீதரன் மற்றும் சுந்தர் ஆகியோர் தேநீர் ஏற்பாடு செய்து நிதியுதவி செய்தனர் தங்குவதற்கு மண்டபம் ஏற்பாடு செய்தனர். ஆதரவளித்த அனைத்து தோழர்களுக்கும் தோழர் அய்யனார் நினைவுப் பரிசாக கழக வெளியீட்டு நூல்களை வழங்கினார்.

*22/03/2025* கொள்ளிடம், சீர்காழி பகுதியில் பிரச்சாரம் நடைபெற்றது. மு.நாகராஜ், இரா. கார்மேகம், விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ.இளையரசன், தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார், கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் க.ராமர், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கு.பாபா, மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை ஆகியோர் இப்பயணத்தில் ஏழு நாட்களும் கலந்துகொண்டனர். மேலும் மோகன்ராஜ், ஆசிரியர் பழனிவேல், போதிசத்வா, செ.பிரகாஷ், கடலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.மதன்குமார், மா.குமார், கல்லை ஆசைத்தம்பி, சங்கர் , வெற்றிவேல், மற்றும் சேலத்தை சார்ந்த ராம் பிரகாஷ், பின்னலுரை சார்ந்த கண்ணன் ஆகியோர் தோழர் அய்யனார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். பிரச்சாரப் பயணத்தில் கழக வெளியீட்டு நூல்களை கு.பாபா மா.குமார் ஆகியோர் பொறுப்பேற்று விற்பனை செய்து ரூ.12,000-ஐ தலைமையிடம் ஒப்படைத்தனர். விழுப்புரம் பயணக்குழுவிற்கு மலேசியாவை சார்ந்த அம்பேத்கர் பெரியார் மார்க்சிய சிந்தனையாளர்கள் குழுவின் சார்பில் நன்கொடையாக 14000 ரூபாய் வழங்கினர். இத்தொகை கடலூர் மாவட்ட கழக தோழர் போதிசத்வா அவர்கள் மூலமாக பெறப்பட்டது.

**சேலம்: இரண்டாம் நாள் 17/03/2023** கருப்பூர் பொறியியல் கல்லூரி அருகில், சேலம் கோட்டை மைதானம், சேலம் தாதகாப்பட்டி கேட், ஆத்தூர் பேருந்து நிலையம் பகுதிகளில் நடைபெற்றது.

மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. கூட்டத்திற்கு கழக சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல், சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், ஆத்தூர் நகர செயலாளர் கணபதி ஆகியோர் தலைமை வகித்தார்.

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார், மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், யாழினி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சேலம் வடக்கு மாவட்டச் செயலாளர் காஜாமைதீன், புரட்சிகர இளைஞர் முன்னணி வின்சென்ட் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ஆத்தூர் மணிகண்டன், திமுக வெங்கடேஷ், மதிமுக கோபால் ராஜ் விசிக இளையராஜா, தமிழ்ப் புலிகள் மாவட்ட செயலாளர் விஜய் குமார், தமிழ்ப் புலிகள் கட்சி ஆத்தூர் ஒன்றிய செயலாளர் செல்வம், உடன் பேராசிரியர் முனைவர் கண்ணபிரான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிமுருகன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

திமுக வர்த்தகர் பிரிவு கொண்டலாம்பட்டி கண்ணன் அவர்கள் தோழர்கள் அனைவருக்கும் மதியம் அசைவ உணவு ஏற்பாடு செய்திருந்தார். இரவு உணவு திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் வெங்கடேஷ் வழங்கினார்.



*(எஞ்சிய பயண செய்திகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்)*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 04, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran